CC 118/2021

07.06.2023

பு.சா.1,

பெயர்: உதிரவாசகன்

த/பெ. கிருஷ்ணன்

பு.சா.1 குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் இந்த நிறுவனத்தில் 6 வருடங்களாக பணியாற்றி வருகிறேன். வழக்கு குறித்து விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது, நிறுவனம் கொடுத்த ஆவணத்தின் அடிப்படையில் தான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான். எங்கள் நிறுவனம் நிறுவன சட்டத்தின் படி பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதற்கான ஆவணத்தினை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

எதிரி எந்த தேதியில் எந்த மாதத்தில் எங்கள் நிறுவனத்தில் சீட்டு குழுமத்தில் சேர்ந்தார் என்றால் 2019 ம் ஆண்டு சேர்ந்தார். தேதி குறிப்பிட்டு கூற இயலாது. சீட்டு குழுமத்தில் சேர எனது நிறுவனத்திற்கு யாரும் அறிமுகப்படுத்தவில்லை. எங்கள் நிறுவனத்தில் எதிரி எந்த தேதியில் எவ்வளவு தொகை செலுத்தியுள்ளார் என்ற விவரத்தினை வழக்கிலும், பிரமாண வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ளேனா என்றால் சரிதான், ஆனால் அதற்குண்டான கணக்கு பட்டியலை தாக்கல் செய்துள்ளேன்.

வழக்கிலும், பிரமாண வாக்குமூலத்திலும் எவ்வளவு சீட்டு தொகையினை எந்த தேதியில் வாங்கியுள்ளார் என்ற விவரத்தினை குறிப்பிட்டுள்ளேனா என்றால் கணக்கு பட்டியலில் தான் குறிப்பிட்டுள்ளேன். சீட்டு தொகையினை கொடுக்கும்போது தொகைக்குரிய உத்தரவாத ஆவணங்களை பெற்றுக்கொண்டு தான் பணம் கொடுப்போம் என்றால் சரிதான்.

ஏலம் எடுப்பவருக்கு சொத்துக்கள் இருந்தால் அதற்குரிய ஆவணம், காசோலை ஆகியவற்றை பெற்றுக்கொண்டு தான் தொகையினை கொடுப்பார்கள் என்றால் சரியல்ல. சீட்டு தொகை குறித்த ஒப்பந்தம் நிறுவனத்தில் பராமரிக்கப்படும் என்றால் சரிதான்.

சீட்டு பணம் எடுக்கப்படும்போது, ஒப்பந்தம் எதுவும் எழுதப்படவில்லை, இரசீது மட்டும் தான் எழுதப்படும். ஒவ்வொரு மாதமும் யார் சீட்டு எடுத்தார்கள் என்ற விவரத்தினை மாவட்ட சீட்டு பதிவாளர் அவர்களுக்கு அனுப்ப வேண்டும் என்றால் சரிதான்.

எதிரிக்கு பணம் கொடுத்த விவரத்தினை மாவட்ட சீட்டு பதிவாளருக்கு அனுப்பியுள்ளேனா என்றால் அனுப்பியுள்ளேன். மாவட்ட பதிவாளர் அவர்களுக்கு எதிரிக்கு எதிராக வழக்கு தொடுத்து நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் இல்லை. அது குறித்து எனக்கு தெரியாது.

எதிரி ஏலத்தொகை அசலில் ஒரு பாகத்தினை செலுத்தியுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளேன். ஆனால் எவ்வளவு தொகை, அசலின் அளவு மற்றும் வட்டியின் அளவினை குறிப்பிட்டு கூறவில்லை என்றால் கணக்கு பட்டியலில் குறிப்பிட்டுள்ளேன்.

05.01.2021ம் தேதி எதிரி அலுவலகத்தில் வந்து காசோலை கொடுத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், அலுவலகத்தில் இது குறித்து கூறினார்கள். எதிரி கடிதம் எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. (**எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கு இணங்க சாட்சியின் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக 26.06.2023ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**)

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/. Thiru. E. Pragasam B.A.,B.L.,)**

Judicial Magistrate No. II,
Pollachi.